

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 29.03.2025 | ஈரோடு வடக்கு | கோபிச்செட்டிப்பாளையம் | ரவுண்டானா, புளியம்பட்டி ரோடு, நம்பியூர் | மாண்புமிகு கோவி.செழியன், பி.மகேஷ் |
| 2 | 29.03.2025 | தருமபுரி கிழக்கு | தருமபுரி | பி.எஸ்.என்.எல். அலுவலகம் அருகில், தருமபுரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, அ.பொர்த்தி வினித் |
| 3 | 29.03.2025 | நாமக்கல் கிழக்கு | சேந்தமங்கலம் | செம்மேடு பேருந்து நிலையம், கொல்லிமலை | திண்டுக்கல் ஐ.லியோனி, ப.முத்து பாண்டி |
| 4 | 29.03.2025 | சேலம் மேற்கு | மேட்டூர் | வைத்தீஸ்வரா மேல்நிலைப்பள்ளி எதிரில், பி.என்.பட்டி | வே.மதிமாறன், முனைவர் எஸ்.திவ்யா |
| 5 | 29.03.2025 | கரூர் | அரவக்குறிச்சி | பரமத்தி | இந்திரகுமார் தேரடி, ச.சேது விநாயகம் |
| 6 | 29.03.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | ஒசூர் | மத்திகிரி | செந்தில்வேல், வே.சீனிவாசன் |
| 7 | 29.03.2025 | தூத்துக்குடி தெற்கு | திருவைகுண்டம் | பேருந்து நிலையம், ஆழ்வார் திருநகர் | உமா, கே.வி.விஜயன் |
| 8 | 29.03.2025 | தஞ்சாவூர் மத்திய | திருவையாறு | திருவையாறு தேரடித் திடல், திருவையாறு | நாஞ்சில் சம்பத், வீ.சதீஷ் |
| 9 | 29.03.2025 | புதுக்கோட்டை தெற்கு | அறந்தாங்கி | பேருந்து நிலையம், அறந்தாங்கி | மில்ட்டன், சொ.தமிழினியன் |
| 10 | 29.03.2025 | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | அண்ணா அரங்கம், ராஜாஜி பூங்கா, வேதாரண்யம் | ராஜகம்பீரன் அப்பாஸ், ர.அகிலா |
| 11 | 29.03.2025 | இராணிப்பேட்டை | அரக்கோணம் | தேரடி அருகில், தக்கோலம் | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், சே.அசாருதீன் |
| 12 | 29.03.2025 | மதுரை மாநகர் | மதுரை மத்திய | சுப்பிரமணியபுரம் | கோவி.லெனின், நா.நவீன் |
| 13 | 30.03.2025 | சேலம் மேற்கு | சங்ககிரி | கலைஞர் சிலை அருகில், தாரமங்கலம் | நாஞ்சில் சம்பத், ம.மோகநிதி |
| 14 | 30.03.2025 | கரூர் | கிருஷ்ணராயபுரம் | வெள்ளியணை | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.தமதி |
| 15 | 30.03.2025 | திருப்பூர் வடக்கு | அவிநாசி | ரவுண்டானா அருகில், சேவூர் | இந்திரகுமார் தேரடி, ச.நாகராஜ் |
| 16 | 30.03.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | ஊத்தங்கரை | ரவுண்டானா அருகில், நால் ரோடு | செந்தில்வேல், ர.ராஜேஷ் |
| 17 | 30.03.2025 | மதுரை வடக்கு | மேலூர் | பேருந்து நிலையம், மேலூர் | திருச்சி சிவா எம்.பி., ப.பிரசாந்த் |
| 18 | 30.03.2025 | மயிலாடுதுறை | சீர்காழி | பழைய பேருந்து நிலையம், சீர்காழி | மில்ட்டன், இரா.மதுமிதா |
| 19 | 30.03.2025 | திருப்பத்தூர் | ஆம்பூர் | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் ரோடு | மருத்துவர்.எஸ்.ஏ.எஸ்.ஹஃபீசுல்லா, மகிழவன் |
| 20 | 30.03.2025 | திருவள்ளூர் மேற்கு | திருவள்ளூர் | இரயில் நிலையம், திருவள்ளூர் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, க.ரா.சந்தியா |
| 21 | 30.03.2025 | திருவாரூர் | மன்னார்குடி | அண்ணா சிலை அருகில், வடுவூர் | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், அக்ஷயா |
| 22 | 31.03.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் தெற்கு | சேரன் காலனி, ராக்கியாபாளையம், நல்லூர் | செந்தில்வேல், ப.விஜயராஜ் |
| 23 | 31.03.2025 | விழுப்புரம் தெற்கு | விக்கிரவாண்டி | காணை தெற்கு ஒன்றியம், கொடார் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.ரோஜா |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 27–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (27.03.2025) வனத் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி திண்டுக்கல் மாவட்டம், காசம்பட்டி கிராமத்தில் 4.97 ஹெக்டேர் அளவிலான பகுதி பல்லுயிர் பாரம்பரிய தலமாக (Bio diversity Heritage Site) அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது தொடர்பான குறும்படத்தை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் / வனத் துறைத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (27.03.2025) சென்னை, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்தில், கிண்டி ஜே3 காவல் நிலைய புறக்காவல் மையத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் காவல் துறை கூடுதல் ஆணையர் (தெற்கு) டாக்டர்.என்.கண்ணன், இணை ஆணையர் சிபிசக்கரவர்த்தி, துணை ஆணையர் பொன.கார்த்திக், கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, நோடல் அலுவலர் மரு.ரமேஷ், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார், ரோட்டரி சங்க நிர்வாகிகள் சரவணன், ராஜசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.